பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

10 10 2025 7 15

வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இந்தியா-ஆஸ்திரேலியா இடையிலான நீடித்த ஒத்துழைப்புகளை மேலும் வலுப்படுத்த உறுதிபூண்டுள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

2. யமுனை நதியை தூய்மைப்படுத்த, மத்திய அரசு, விரிவான செயல் திட்டத்தை உருவாக்கியிருப்பதாக, உள்துறை அமைச்சர் திரு.அமித் ஷா கூறியுள்ளார்.

3. பிஹார் சட்டப்பேரவைத் தேர்தலில், முதற்கட்ட வாக்குப்பதிவு நடைபெறும் 121 தொகுதிகளில், வேட்புமனு தாக்கல் இன்று தொடங்குகிறது.

4. இருமல் மருந்து தொடர்பான விசாரணைக்கு தமிழக அரசு போதிய ஒத்துழைப்பு அளிக்கவில்லை என்று மத்தியப்பிரதேச முதலமைச்சர் திரு. மோகன் யாதவ் குற்றம் சாட்டியுள்ளார்.

5. ஆசியக் கோப்பை கால்பந்து தகுதிச் சுற்றுப் போட்டியில் இந்தியா-சிங்கப்பூர் இடையேயான ஆட்டம் டிராவில் முடிவடைந்தது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

இந்தியா-ஆஸ்திரேலியா இடையிலான நீடித்த ஒத்துழைப்புகளை மேலும் வலுப்படுத்த உறுதிபூண்டுள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

கேன்பராவில் ஆஸ்திரேலிய வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. Penny Wong-ஐ சந்தித்துப் பேசிய அவர், பாதுகாப்பு மற்றும் பிராந்திய நிலைத்தன்மை உள்ளிட்ட அம்சங்களில் இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

இரு நாடுகளுக்கு இடையிலான நட்புறவு, பரஸ்பர நம்பிக்கை மற்றும் ஜனநாயகப் பண்புகள் அடிப்படையில் அமைந்தது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த சந்திப்பின்போது ஆஸ்திரேலியாவின் வளர்ச்சியில் இந்திய வம்சாவளியினரின் பங்களிப்புக்கு அந்நாட்டு அமைச்சர் திரு. Penny Wong பாராட்டு தெரிவித்தார்.

<<<<>>>>

யமுனை நதியை தூய்மைப்படுத்த, மத்திய அரசு, விரிவான செயல் திட்டத்தை உருவாக்கியிருப்பதாக, உள்துறை அமைச்சர் திரு.அமித் ஷா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில், தில்லி நீர்வள வாரியத்தின் மூலம் ஆயிரத்து 816 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றி முடிக்கப்பட்ட திட்டங்களைத் தொடங்கிவைத்து, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி அவர் பேசினார்.

புதிதாக தொடங்கப்பட்ட கழிவுநீர் சுத்திகரிப்பு திட்டங்களின் மூலம் யமுனை நதி தூய்மையானதாக மாறுவதுடன், தில்லி மக்களுக்கு அனைத்துப் பருவங்களிலும் சுத்தமான தண்ணீர் கிடைப்பதை உறுதி செய்யும் என்றும் திரு. அமித் ஷா தெரிவித்தார்.

<<<<>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான இலக்குகளை அடைய, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பயன்பாடு மிகவும் அவசியம் என்று, அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு.பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

குஜராத் மாநிலம் மெஹ்சானாவில், பசுமை எரிசக்த குறித்த கருத்தரங்கில் பேசிய அவர், பிரதமர் திரு.நரேந்திர மோடி தலைமையிலான ஆட்சியில், நாட்டின் எரிசக்தித்துறை, இதுவரை இல்லாத அளவிற்கு மாற்றம் அடைந்திருப்பதாகக் கூறினார்.

2014-ம் ஆண்டு இரண்டு ஜிகாவாட் அளவிற்கு மட்டுமே இருந்த நாட்டின் சூரியசக்தி மின் உற்பத்தி, தற்போது 125 மெகாவாட்டாக அதிகரித்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தியாவை, 2047-ம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த நாடாக மாற்றுவதற்கு, முதலில் நாட்டை உற்பத்தி மையமாக மாற்றுவதுடன், மின் உற்பத்திக்கான சாதனங்கள் தயாரிப்பு அதில் முக்கிய இடம்பெறுவது அவசியம் என்றும் திரு.பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்தார்.

<<<<>>>>

சமுதாயத்தின் அனைத்துத் தரப்பையும் சேர்ந்த மக்களின் முன்னேற்றத்திற்காக, மத்திய அரசு அயராது பாடுபட்டு வருவதாக, சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை இணையமைச்சர் திரு.ராம்தாஸ் அதவாலே கூறியுள்ளார்.

கோவா மாநிலம் பனாஜி-யில், மாற்றுத் திறனாளிகளுக்கு அதிகாரமளிப்பதற்கான PURPLE திருவிழாவில் பேசிய அவர், மாற்றுத் திறனாளிகள், மூத்த குடிமக்கள், ஷெட்யூல்டு வகுப்பினர் மற்றும் பழங்குடியினரின் நலனுக்காக, கடந்த 11 ஆண்டுகளாக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

திட்டச் செலவு அதிகரிப்பதைத் தவிர்க்க், கட்டமைப்புத் திட்டங்களை, குறித்த காலத்திற்குள் நிறைவேற்றி முடிப்பதில், தற்போதைய மத்திய அரசு அதிக கவனம் செலுத்தி வருவதாகவும் திரு.ராம்தாஸ் அதவாலே குறிப்பிட்டார்.

<<<<>>>>

பிஹார் சட்டப்பேரவைத் தேர்தலில், முதற்கட்ட வாக்குப்பதிவு நடைபெறும் 121 தொகுதிகளில், வேட்புமனு தாக்கல் இன்று தொடங்குகிறது.

243 உறுப்பினர்களைக் கொண்ட பீகார் சட்டப்பேரவைக்கு, அடுத்த மாதம் 6 மற்றும் 11-ந் தேதிகளில், இரண்டு கட்டங்களாக வாக்குப்பதிவு நடைபெற உள்ளது.

இதில், முதற்கட்ட வாக்குப்பதிவு நடைபெறும் தொகுதிகளுக்கான அறிவிக்கை இன்று வெளியிடப்படுகிறது.

அதனைத் தொடர்ந்து, வேட்பு மனுத்தாக்கல் இன்று தொடங்கி, வரும் 17-ந் தேதி வரை நடைபெற உள்ளது.

மறுநாள் 18-ந் தேதி மனுக்கள் மீதான பரிசீலனை நடைபெறும்.

வேட்புமனுக்களைத் திரும்பப் பெற, இம்மாதம் 20-ந் தேதி கடைசி நாளாகும்.

அன்று மாலையே வேட்பாளர்களின் இறுதிப்பட்டியல் வெளியிடப்பட்டு, அவர்களுக்கான சின்னங்களும் ஒதுக்கீடு செய்யப்படும்.

இத்தொகுதிகளில், நவம்பர் 6-ந் தேதி வாக்குப்பதிவு நடத்தப்பட்டு, அடுத்த மாதம் 14-ந் தேதி வாக்கு எண்ணிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது.

<<<<>>>>

இருமல் மருந்து தொடர்பான விசாரணக்கு தமிழக அரசு போதிய ஒத்துழைப்பு அளிக்கவில்லை என்று மத்தியப்பிரதேச முதலமைச்சர் திரு. மோகன் யாதவ் குற்றம் சாட்டியுள்ளார்.

Coldriff இருமல் மருந்தை உட்கொண்டதால் பாதிக்கப்பட்டு நாக்பூர் மருத்துவமனையில் சிகிச்சை பெறுவோரை சந்தித்தபின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த விவகாரம் தொடர்பாக தமிழக மருந்துக் கட்டுப்பாட்டு அதிகாரி முறையான விசாரணை மேற்கொண்டு சம்பந்தப்பட்ட மருந்து தயாரிப்பு நிறுவனம் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இதனிடையே தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இருமல் மருந்து விவகாரத்தில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றிய கடிதம் மத்தியப்பிரதேச அரசிடமிருந்து கிடைக்கப் பெற்ற உடனேயே அதிகாரிகள் அந்த நிறுவனத்தில் ஆய்வு நடத்தி தமிழகம் முழுவதும் அந்த மருந்து விற்பனைக்கு தடை விதிக்கப்பட்டதாக கூறப்பட்டுள்ளது.

மேலும் ஒடிசா, புதுச்சேரி உள்ளிட்ட பகுதிகளுக்கும் இந்த மருந்து விநியோகிக்கப்பட்டிருப்பதால், இதுகுறித்து அந்த மாநில அரசுகளுக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

சம்பந்தப்பட்ட மருந்து உற்பத்தி உடனடியாக நிறுத்தப்பட்டு அந்த நிறுவனத்தின் உரிமங்களை முழுமையாக ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

தூய்மையே சேவை இயக்கத்தின்போது, ஆயிரத்து 500 இடங்கள் சுத்தப்படுத்தப்பட்டிருப்பதாக, தகவல் ஒலிபரப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கடந்த 2-ந் தேதி வரை மேற்கொள்ளப்பட்ட இந்த இயக்கத்தின்போது, தூய்மையைப் பராமரிக்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைக்கும் விதமாக, 2 ஆயிரத்த 766 நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டதாக, அமைச்சகத்தின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீண்ட நாட்களாக சுத்தப்படுத்த வேண்டியிருந்த இடங்களை தூய்மைப்படுத்தியது, தூய்மை விழிப்புணர்வுப் பிரச்சாரம், வீடு-வீடாகச் சென்று தூய்மையின் அவசியத்தை எடுத்துரைத்தல், தூய்மைப் பேரணிகள், ஓவியப் போட்டி, மற்றும் கலாச்சாரப் போட்டி உள்ளிட்டவற்றில், 59 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்றதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

இது தவிர, கடந்த மாதம் 25-ந் தேதியன்று, ஒரு நாள் - ஒரு மணி நேரத்தில், ஒன்றுபட்டு பணியாற்றுவோம் என்ற சிறப்பு நிகழ்ச்சியும், தூய்மையே சேவை இயக்கத்தின் நிறைவு நாளான இம்மாதம் 2ஆம் தேதியன்று தூய்மை இந்தியா கொண்டாட்டமும் நடைபெற்றதாக, தகவல் - ஒலிபரப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

உத்தரப்பிரதேச மாநிலம் அயோத்தியா மாவட்டத்தில் கட்டிடம் ஒன்று இடிந்து விழுந்த விபத்தல் 5 பேர் உயிரிழந்தனர்.

அம்மாநிலத்தில் உள்ள Pura Kalandar பகுதியில் நேரிட்ட இந்த விபத்திற்கு சமையல் எரிவாயு சிலிண்டர் வெடித்தது காரணமாக இருக்கக் கூடும் என்று முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாக மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு, கௌரவ் குரோவர் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

ஆப்கானிஸ்தான் வெளியுறவுத் துறை அமைச்சர் திரு.அமீர் கான் முத்தாகி, இந்தியாவில் ஒரு வார கால அரசுமுறைப் பயணமாக, புதுதில்லி வந்துள்ளார்.

அவரது இந்தியப் பயணத்திற்கு, ஐ.நா. பாதுகாப்பு சபை அனுமதி அளித்த்தையடுத்து, அவர் புதுதில்லி வந்துள்ளதாக, வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் திரு.ரந்தீர் ஜெய்ஷ்வால் கூறியுள்ளார்.

இம்மாதம் 16-ந் தேதி வரை இந்தியாவில் பயணம் மேற்கொள்ளும் திரு.அமீர் கான் முத்தாகி, வெளியுறவுத்துறை அமைச்சர் திரு.ஜெய்சங்கர் உள்ளிட்ட பல்வேறு தலைவர்கள் மற்றும் தொழில் - வர்த்தகப் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேச உள்ளார்.

<<<<>>>>

செயற்கை இழையால் தயாரிக்கப்பட்ட ஆடைகள், துணி மற்றும் தொழில்நுட்ப ஜவுளி ரகங்களுக்கும், உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகை திட்டத்தின்கீழ் நிதியுதவி வழங்கப்படும் என்று மத்திய ஜவுளி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதற்கேற்ப, ஜவுளித் துறையில் உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகை திட்டத்திற்கான விதிமுறைகள் மாற்றியமைக்கப்பட்டிருப்பதாக அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

ஜவுளித் தொழில் துறையினர் எதிர்கொள்ளும் சவால்களுக்குத் தீர்வு காணவும், தொழில் தொடங்குவதை எளிதாக்கி, இத்துறையில் புதிய முதலீடுகளை ஊக்குவிக்கும் வகையிலும், இம்முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஜவுளித்துறையில் கூடுதல் வேலைவாய்ப்புகளை உருவாக்கி, உலகளாவிய ஜவுளிச் சந்தையில், இந்தியாவை முன்னணி நாடாக மாற்றும் நோக்கிலும், இந்த மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மத்திய ஜவுளி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**<<<<>>>>**

ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் திருமதி Ursula Von der Leyen-க்கு எதிராக ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட இரண்டு தீர்மானங்களும், தோல்வியடைந்தது.

ஐரோப்பிய யூனியன் - அமெரிக்கா இடையேயான வர்த்தக ஒப்பந்தம், ஐரோப்பிய ஏற்றுமதியாளர்களுக்கு பாதிப்பு ஏற்படுத்துவதாக இருப்பதைக் கண்டித்தும், அமெரிக்காவில் உற்பத்தி செய்யப்படும் எரிசக்தியை வாங்குவதற்காக, 750 பில்லியன் யூரோ செலவிடுவதற்கு எதிர்ப்பு தெரிவித்தும், இந்த நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

வலதுசாரி மற்றும் இடதுசாரி குழுக்களால் கொண்டுவரப்பட்ட இத்தீர்மானம், கடந்த திங்களன்று ஐரோப்பிய நாடாளுமன்றத்தால் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, நேற்று வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இதில், நடுநிலை அணியினர், திருமதி. Ursula Von der Leyen-க்கு ஆதரவளித்ததையடுத்து, அவரது பதவி தப்பியதாக ஐரோப்பிய யூனியன் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

<<<<>>>>

ஆசியக் கோப்பை கால்பந்து தகுதிச் சுற்றுப் போட்டியில் இந்தியா-சிங்கப்பூர் இடையேயான ஆட்டம் டிராவில் முடிவடைந்தது. சிங்கப்பூரில் நடைபெற்ற இப்போட்டியில் இரு அணிகளும் தலா ஒரு கோல் அடித்தன.

--------------

ஆர்க்டிக் ஓபன் பேட்மிண்டன் போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் Dhruv Kapila - Tanisha Crasto இணை இன்று சீனாவின் Jiang Z - Wei இணையை எதிர்கொள்கிறது.

இந்தப் போட்டி ஃபின்லாந்தில் மாலை 6 மணிக்கு நடைபெறும்.

-------------

உலகக்கோப்பை மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் தென்னாப்பிரிக்கா, இந்திய அணியை 3 விக்கெட் வித்தியாசத்தில் வென்றது.

விசாகப்பட்டினத்தில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் களமிறங்கிய இந்தியா, 49 புள்ளி 5 ஓவரில் 251 ரன் எடுத்தது.

இதையடுத்து 252 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய தென்னாப்பிரிக்க அணி 7 விக்கெட் இழப்புகு 252 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

---------------

PVL வாலிபால் போட்டியில் சென்னை அணி - கோவா அணியை வென்றது.

<<<<>>>>